# ஒன்றான திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் வாழி திருநாமம்

தையில் மிருகசீருடத்தில் தரணி வந்தோன் வாழியே
தண்கோவலூர் நகர் விளங்கத் தான் உதித்தான் வாழியே
வையகத்தில் ஈடுரைக்கும் வாசகத்தோன் வாழியே
வரயோகி கருணையினால் வாழ்ந்தருள்வோன் வாழியே
செய்ய இடைகழி ஆயன் செல்வம் வளர்த்தோன் வாழியே
சீராரும் கோவலூர் சிறக்க வந்தோன் வாழியே
மையல் மிகு கோவல் எம் இராமாநுச முனி வாழியே
மலர் அடியும் முக்கோலும் மாநிலத்தில் வாழியே

---